# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor / Publisher

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 33 December- 2020 Issue - 12

ஆசிரியர் உரை

## இயேசுவுக்கு இடமில்லை

**நா**ம் ஒவ்வொருவரும் நிலையில்லா இவ்வாழ்வில் விரும்புபவைகள் மற்றும் விரும்பாதவைகள் என்று ஒரு பட்டியல் வைத்திருப்போம். நமக்கு நாமே ஏற்படுத்தி வைத்திருக்கும் இப்பட்டியலில் வார்த்தைகள், பொருள்கள், இடங்கள் என்று எல்லாமே இருக்கும். ஒருவேளை, அவரவர் பழக்கத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப இது மாறுபட்டாலும் இது ஒரு பொதுவான நியதியே. ஆயினும், இவைகளுள் விதிவிலக்காக '**இல்லை**' என்னும் வார்த்தையை நாம் சொல்ல முடியும். எப்படியெனில், இது சில நேரங்களில் விரும்பும் வார்த்தையாகவும், பல தருணங்களில் விரும்பாத வார்த்தையாகவும் இருக்கும். பல சந்தர்ப்பங்களில் பிறருக்கு **இல்லை** என்பதைத் தயக்க மில்லாமல் பயன்படுத்தும் நாம், மற்றவர் நமக்கு **இல்லை** என்று சொல்வதை விரும்புவதில்லை. அதிலும் குறிப்பாக , கண்டிப்பாக கிடைக்கும். நிச்சயம் நடக்கும் என்று நம்புகிற நேரங்களில், '**இல்லை**' என்று சொல்லப்படுமானால் கடும் அதிருப்திக்கும், பெருத்த ஏமாற்றத்திற்கும் உள்ளாகிறோம்.

இயேசு ஆண்டவரின் வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பும், தேவ மைந்தனாகிய இயேசுவைப் பெற்றுக் கொடுக்கும் பாக்கியம் பெற்ற மரியாளும் இதே விதமான ஓர் எக்கச்சக்க சூழ்நிலையை தங்கள் வாழ்வின் ஒரு முக்கியமான காலகட்டத்தில் எதிர் கொண்டனர். ஆம், உண்மையாகவே அது ஒரு சவாலான சந்தர்ப்பம். பரிசுத்த ஆவியானவரின் அனுக்கிரகத்தால் கர்ப்பம் தரித்த மரியாள் அப்பொழுது நிறை மாத கர்ப்பிணி. நீதிமானாகிய யோசேப்போடு நாசரேத்தில் நல்லபடியாக வாழ்ந்து

கொண்டிருந்த நேரத்தில், பெத்லகேமுக்குச் சென்றாக வேண்டிய கட்டாயம். பாடுகளுக்கு மத்தியில் பயணம் மேற்கொண்டு, பெத்லகேமில் காத்திருந்த நாட்களில், பிரசவ வேதனை ஏற்பட்டு, மறைவிடம் தேடி '**சத்திரத்தை நாடின போது**', **இடமில்லை** என்று சொல்லப்பட்டது. யாருக்கு இடமில்லையாம்! வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவருக்கு! (கொலோ 1-18), இது எப்படி இருக்கு?

சரி, இப்பொழுது நம்முடைய வழக்கத்தின் படிமேலும் இதன் பின்னணிக் காரியங்களை கவனிப்போம்.

நாசரேத்தில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தப் பரிசுத்த தம்பதியர் பெத்லகேமுக்கு ஏன் போனார்கள் என்ற கேள்வி வருகிறது. எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து எழுதின லூக்கா இதற்குபதில் கொடுக்கிறார். அன்றைய உலகை ஆண்டு கொண்டிருந்த ரோமப் பேரரசின் முதல் மன்னன் அகஸ்துராயன். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த ஜூலியஸ் சீசருக்கு இவன் உறவின் முறையான். தனது 32 ம் வயதில் அரியணை ஏறி ஒரு 44 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி புரிந்தவன். தன் சிறப்பான ஆட்சிக்கு அடையாளமாக அவன் செய்தவைகளுள் ஒன்று நாடு முழுவதும் '**குடிமதிப்பு**' எழுத வேண்டுமென்ற ஆணை. அதினிமித்தம், புலம் பெயர்ந்து வயிற்றுப் பிழைப்பினிமித்தம் தேசத்தின் பலபலப் பகுதிகளில் வாழ்ந்து வந்த குடிகள் பூர்வீக பூமிக்குத் திரும்ப வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது.

யோசேப்பு தாவீதின் வம்சத்தானாக இருந்தபடியால் ( மத் 11:20). சுமார் 125 கி.மீ தொலைவிலிருந்த தாவீதின் ஊருக்கு தனக்கு **நியமிக்கப்பட்டிருந்த** மரியாளைக் கூட்டிக் கொண்டு போனான். யூதேயா மலை நாடாக இருந்தபடியாலும், மரியாள் நிறைமாதமாக இருந்தபடியாலும், அது மிகவும் கடினமான பயணமாகவே இருந்திருக்கும். தேசத்தின் பல முனைகளிலிருந்து புலம் பெயர்ந்து சென்றவர்கள் குடிமதிப்புக்காக பெத்லகேம் வந்திருக்க வேண்டும். பிழைப்பினிமித்தம் கொஞ்ச காலத்துக்கு முன்பாகச் சென்று, ஊரோடு தொடர்ந்து தொடர்பிலிருந்த வர்களுக்கு அவர்கள் திரும்பி வந்த போது தங்குவதற்கு இடம் சுலபமாக கிடைத்திருக்கும். அத்தோடு, துரிதமாய்ப் புறப்பட்டு வேகமாகப் பயணித்து வந்தவர்களுக்கு சத்திரத்தில் இடம் கிடைத்திருக்கும். ஆனால், யோசேப்புக்கும் மரியாளுக்கும் இந்த இரண்டு வாய்ப்புகளும் இல்லை போல் தெரிகிறது.

அவர்களிருவரும் பெத்லகேமில் தங்கியிருந்தது பற்றிக் குறிப்பிடும் வசனம், '**எங்கு தங்கியிருந்தார்கள்**' என்று குறிப்பிட வில்லை. ஆனால், தங்கியிருந்த இடம் தோதாக அமையவில்லை

என்று மாத்திரம் தெரிகிறது. அப்படி இருந்திருக்குமானால், பிரசவிக்கும் நேரம் வந்த போது சத்திரம் தேடி போயிருக்கத் தேவையில்லை. சத்திரம் என்பது வழிப்போக்கர்கள் ஓய்வெடுப்பதற்கும், தூங்குவதற்கும், தங்களது உடமைகளை பாதுகாப்பாக வைப்பதற்குமான தடுப்புகள் இல்லாத ஒரு பெரிய அறை. தங்கும் பயணிகள் தங்களுக்கான படுக்கைகளையும், உணவுத் தேவைகளையும் கொண்டு வந்து விட வேண்டும். முன்னணை என்பது பயணிகள் ஏறிவந்த விலங்கினங்கள் கட்டப்படுவதற்கும், அவைகளுக்கான உணவளிக்கவும் பயன்படுத்தப்பட்ட இடம். ஏசாயா தீர்க்கன் இந்த முன்னணை குறித்து பேசியிருக்கிறார். [ஏசாயா 1:11]. சில சத்திரங்களில் இந்த முன்னணை என்பது '**பின்னணையாகக்**' கூட இருக்கும். அதாவது, சத்திரத்து பின்பக்கச் சுவரின் மேற்கூரை அப்படியே நீட்டப்பட்டு பக்கவாட்டு சுவர் இல்லாமல் பிராணிகளுக்காக இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். எப்படியோ இப்படிப்பட்ட ஓர் இடத்தில் தான் அந்த குறிப்பிட்ட இரவில் யோசேப்பும், மரியாளும் '**மகிமையின் ராஜாவை**' இப்பூமியில் அவதரிக்கச் செய்வதற்கு தவித்துக் கொண்டிருந்தார்கள். எப்படி? எழுதுவதற்கு கை நடுங்குகிறது!

தவிப்பான அந்நேரத்தில் அவர்களுக்கு உதவிட ஓர் ஆள் இருந்ததாகத் தெரியவில்லை. எப்படியென்றால், பிள்ளையை துணிகளில் சுற்றி முன்னணையில் '**கிடத்தினாள்**' என்றுள்ளது [லூக் 2:7]. பிரசவித்த கையோடு தானே அந்த வேலையையும் செய்துள்ளாள். எப்படி சமாளித்தாளோ அந்த அருமைத் தாய். இப்படி இருக்கலாமோ? பிரசவிக்கப்போகும் குழந்தை பற்றிய தேவ தூதனின் முன்னறிவிப்புகள் [லூக் 1:25] நெஞ்சில் நிழலாடியதால் வலியும், வேதனையும், பாடுகளும் மாயமாய் மறைந்து விட்டதோ?

வருடத்தில் இறுதி மாதமாகிய டிசம்பர் மாதம் உலகம் அனைத்திலுமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தால் இயேசுவின் பிறப்பு பற்றிப் பேசப்படும். டிசம்பர் மாதம் தான் இயேசு பிறந்த மாதம் என்பதற்கு வேதாகமம் எந்தச் '**சான்றும் கொடுப்பதில்லை**'. பாரம்பரியம் பெற்றுக் கொடுத்த சவலைப் பிள்ளைகளில் இதுவும் ஒன்று. எப்படியோ, இயேசுவின் பிறப்பு பற்றிப் பேசப்படும் பொழுது, சத்திரமும், முன்னணையும் தவிர்க்கப்பட முடியாதவைகள். இயேசுவுக்கு சத்திரத்தில் இடமில்லை என்று பேசப்படும் சத்தம் நம் காதுகளிலும் விழுவதால்,இந்தத் தலைப்பிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக் கூடிய காரியங்கள் என்னயென்று கவனிப்போம்.

**I பூமியில் வாசம் செய்த போது இயேசுவுக்கு இடமில்லை.**

இயேசுவுக்கு இடமில்லை என்ற தலைப்பிலிருந்து நம்மால் தெரிந்து கொள்ளகூடிய முதல் காரியம், அவர் பூமியில் வாசம் செய்த நாட்களிலும் அவருக்கு இடமில்லை என்பது.

இயேசு நித்திய வாசி (ஏசாயா 9:6). அதாவது, ஆதியும், அந்தமும் இல்லாதவர். இன்னும், தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர். ஆயினும், பிதாவாகிய தேவனால் இப்பூமியில் தற்காலிகமாக வாழ்ந்து, தன் படைப்புகளில் பிரதானமானவனாகிய மனிதன் நித்திய ஜீவன் அடையும்படியாக அனுப்பப்பட்டார் (யோவான் 3:16). அப்படி அனுப்பப்பட்டதற்கான நோக்கம். 1. இழந்து போனதைத் தேடுவது (லூக்கா 19:10). 2. கெட்டுப் போனதை இரட்சிப்பது (மத்.18:11).

இப்படிப்பட்ட உன்னத நோக்கத்திற்காக இயேசு இப்பூமியில் பிறக்க நேர்ந்த போது, **இடமில்லை என்று** அந்த சத்திரக்காரன் சொன்னது, அவன் மீது நமக்குக் கடும் கோபத்தை வருவிக்கிறது. நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணுக்கு இடமில்லை என்று எப்படித் தான் சொன்னானோ, இவன் என்ன பிறவியோ என்று. ஆனால், இயேசுவுக்கு இப்பூமியில் இடமில்லை என்று சொன்னது இவ னோடு முடிந்து போகவில்லை. சரித்திரத்தைவிட்டு வெளியேறிய பிறகு, அந்த பெத்லகேமிலும் அவருக்கு இடமில்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் பெத்லகேமில் இயேசு பிறப்பார் என்பது, அவர் பிறப்பதற்கு சுமார் 725 ஆண்டுகளுக்கு முன்பே மீகா தீர்க்கனால் முன்னுரைக்கப்பட்டுள்ளது. **எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தாலும் இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தி னுடையது** (மீகா.5:2) என்று. இருந்தபோதிலும், அவருக்கு அங்கு இடமில்லை. எப்படியெனில், இயேசுவின் பிறப்பின்போது தோன்றிய நட்சத்திரத்தால், கிழக்கிலிருந்து புறப்பட்ட சாஸ்திரி களின் வழிநடத்தப்பட்டு, யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்று எருசலேமில் விசாரித்தார்கள். அத்தோடு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள். (மத்.2:2) இவர்களின் இந்த விசாரிப்பின் மூலம் ஏரோது ராஜாவும், எருசலேம் நகரத்தாரும் கலங்கிப் போனார்கள் (2: ) தன் அரியணைக்கு ஆபத்து வந்துவிட்டதென்று எண்ணி, இயேசுவைக் கொல்லத் திட்டமிட்டு சட்டம் போட்டு நிறை வேற்றினான் ஏரோது (மத். 2:16).

அச்சமயத்தில் தேவதூதன் நீதிமானாகிய யோசேப்புக்குச் சொப்பனத்தில் தோன்றி பிள்ளையையும், அதில் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போ என்றார் (2:18) தூதன், **உன் பிள்ளை** என்று சொல்லவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆம், இயேசு யோசேப்பின் குமாரன் அல்ல, அவர் தேவ குமாரன் (யோவான் 3:16). ஆகத்திரத்தில் மட்டுமல்ல பிறந்த ஊரிலும் இடமில்லாமல் இப்படி ஓடிப்போக நேர்ந்தது.

சரி, பிறந்த ஊரிலே தான் அப்படி, வளர்ந்த ஊரிலாகிலும் நிலமை வேறுவிதமாக இருந்ததா என்று பார்த்தால் அது அதற்குமேல். பூலோக வாழ்வின் பெரும்பகுதியை அவர் நாசரேத்தில் செலவழித்திருந்தும் இயேசுவை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆம், தனது ஊழியத்தின் ஒரு கட்டத்தில் அவர் நாசரேத்துக்கு வந்து, ஜெப ஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்த பொழுது, அவர் போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். ஆயினும், பக்தி நிலையில் அவர்கள் யாரென்று அவர்களுக்குக் காட்ட முற்பட்ட போது, **கோபமூண்டு,** செங்குத்தான மலை உச்சியிலிருந்து அவரைத் **தலைகீழாய்த் தள்ளிக் கொலை செய்யும்படி** முயற்சித்தார்கள் (லூக் 14:16-28) அங்கிருந்து இயேசு கடந்து போய்விட்டார். இன்னும், அவர் ஊழியம் செய்த நாட்களில் **கதரேனர்** இயேசுவைத் தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படி வேண்டிக் கொண்டார்கள் (மாற்கு 5:17) இப்படி, இயேசுவுக்கு இப்பூமியில் இடமில்லை, இடமில்லை என்று பல கட்டங்களில் சொல்லப் பட்டுள்ளது.

அருமையானவர்களே, இயேசு பிறந்து, உலகின் பாவங் களுக்காக சிலுவையில் மரித்து, தேவனுடைய வல்லமையால் உயிரோடு எழுந்து வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு சுமார் 2000 ஆண்டுகள் ஆன நிலையாலும் கிட்டதட்ட அதே நிலை தான் உலகில் நீடிக்கிறது. அநேக ஊர்களிலும் பெரும்பாலான நகரங்களிலும், பல தேசங்களின் எல்லைகளிலும் இயேசுவுக்கு இடமில்லை என்ற நிலை காணப்படுகிறது. இயேசுவிலும், அவருடைய உபதேசக் காரியங்களிலும் அவருடைய ஒன்றான மெய்ச் சபையிலும் அன்பு கூருகிறவர்கள் இது குறித்துச் சிந்திப்பது அவசியம்.

### II பல சபைப் பிரிவுகளில் இயேசுவுக்கு இடமில்லை

இயேசுவுக்கு இடமில்லை என்ற தலைப்பிலிருந்து நம்மால் தெரிந்து கொள்ளக் கூடிய இரண்டாவது காரியம், அவர் பெயரை உச்சரிக்கும் பிரிவுச் சபைகளில் அவருக்கு இடமில்லை என்பது.

அநேக பிரிவினைச் சபைகள் நம்புவது போல **ராஜ்ஜியம்** ஏற்படுத்தும்படி வந்த இயேசுவை யூதர்கள் நிராகரித்ததால், தற்காலிக ஏற்பாடாகச் செய்யப்பட்டது அல்ல சபை. மாறாக, சபை தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியானது. சபையின் மூலம் தேவனுடைய அநந்தஞானம் வெளிப்பட்டிருக்கிறது (எபே 3:9,10). சபை தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டது. இயேசு ஆண்டவரும் ஒன்றான மெய்ச் சபையை மகிமையுள்ள சபையாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்குத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் (எபே 5:27). இதினிமித்தம், பரலோக தேவன் அவரை உன்னதங்களில் வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப் படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபே. 1:21–23). ஆக, இயேசு தான் **சபைக்குத் தலைவராக** இருக்கிறார். இயேசு இருக்கும் பரலோகம் **தலையிடம்.**

ஆனால், கிறிஸ்தவ உலகில் நாம் காண்பது என்ன? தங்கள் பிரிவுச் சபைகளின் ஆரம்ப கர்த்தா இவர் தான் என்று பல மனிதர்களை வெவ்வேறு நாடுகளிலிருந்து அடையாளம் காட்டு கிறார்கள். அத்தோடு, தங்கள் பிரிவுகளுக்கான தலைமையிடம் இது தான் என்று பல நாடுகளையும், பட்டணங்களையும் சுட்டிக் காண்பிக்கிறார்கள். தேவனுடைய திட்டத்திற்கு மாறாகவும், இயேசுவின் தியாகத்திற்கு எதிராகவும் உள்ள இந்தப் பிரிவுக் கூட்டங்கள் இயேசுவின் பெயரை ஓயாமல் உச்சரிக்கிறார்கள். இயேசுவுக்காக அநேக காரியங்களைச் செய்கிறோம் என்றும் மார்தட்டிக் கொள்ளுகிறார்கள். இது எப்படிச் சரியாக இருக்கும்? குருடருக்குக் குருடர் வழிகாட்டுவது குறித்து இயேசு தம் சீடர்களிடம் பேசிவிட்டு இப்படியாகக் கேட்கிறார். **என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்னை?** என்று. (லூக்கா. 6:46)

இங்கே இயேசு என்ன சொல்லுகிறார்? அவரை ஆண்டவர் என்று ஒருவனோ, ஒரு கூட்டமோ சொன்னால். அவர் சொல்லுகிறபடி, அவர் உபதேசித்துள்ளபடி, அவர் கட்டளை யிட்டுள்ளபடி செய்ய வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால், ஆண்டவரே, ஆண்டவரே என்று கூப்பிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். யோவான் அப்போஸ்தலன் பின்னாளில் இது குறித்து, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறிநடக்கிற எவனும் தேவனை

உடையவனல்ல கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (II யோவான் 9) என்றார்.

அருமையானவர்களே! சபைக்குத் தலைவராயிருக்கிற இயேசுவின் உபதேசக் காரியங்களைப் புறந்தள்ளிவிட்டு அவருடைய நாமத்தை ஓயாமல் உச்சரிப்பதாலும், அவருடைய பெயரால் பண்டிகைக் கொண்டாட்டங்கள் உட்பட பல காரியங்களைச் செய்வதாலும் எவ்விதப் பயனும் இல்லை. ஒருவகையில், நாமும் சத்திரக்காரன் போல், ஏரோது ராஜா போல், நாசரேத் ஊரார் போல் இயேசுவுக்கு இடமில்லை என்று சொல்லுகிறவர்களாகவே இருப்போம். அய்யய்யோ, நாங்கள் அப்படியில்லை எங்கள் வாழ்வில் இயேசுவுக்கு இடம் உண்டு சொல்லுகிறவர்களாக இருப்போமானால், பவுலைப்போல **ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?** என்று கேட்கிறவர்களாக நாம் மாற வேண்டும். அது சபையின் பெயராக இருந்தாலும், தலைமையிடம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், இரட்சிப்பின் உபதேசமாக இருந்தாலும், சபையில் பெண்களின் பங்காக இருந்தாலும் கிறிஸ்துவின் உபதேசக் காரியங்களுக்கும் நம்மை அப்படியே ஒப்புக் கொடுக்க வேண்டும்.

### III **பல கிறிஸ்தவர்களிடத்திலும் இயேசுவுக்கு இடமில்லை**

**இயேசுவுக்கு இடமில்லை** என்னும் தலைப்பிலிருந்து, நம்மால் தெரிந்து கொள்ளக்கூடிய மூன்றாவது காரியம், பல கிறிஸ்தவர்கள் வாழ்விலும் அவருக்கு இடமில்லை என்பது.

பிறக்க நேர்ந்த சத்திரத்திலும், பிறந்த ஊராகிய பெத்லகேமிலும், இன்னும் வளர்ந்த நகரமாகிய நாசரேத்திலும் அவருக்கு இடமில்லாமற்போனது வருத்தமாக இருந்தாலும் ஓரளவு சீரணிக்க முடிகிறது. ஆனால், இயேசுவின் காரியங்களை நம்பி, அவருடைய நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய உபதேசப்படி வாழ்கிறோம் என்கிற கிறிஸ்தவர்களிடத்தில், அவருக்கு இடமில்லை என்பதை கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது பெரும் மோசடியாகவே தெரிகிறது.

**கிறிஸ்தவன்** என்கிற இச்சீரிய பதம் இன்றைக்குப் போகிறபோக்கில் உச்சரிக்கப்பட்டாலும், இது ஒரு சாதாரண வார்த்தை அல்ல. இந்த **உன்னத** பெயரைத் தரித்துக் கொள்வதற்கு, இயேசுவின் உபதேசக் கோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்த பிறகு பல வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. **இந்தப் பெயர் முதல் முதல் அந்தியோகியாவில்** சீடர்களுக்கு வழங்கப்பட்டது. (அப்.11:26-ல்) **சீடர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று** என்றுள்ளது. ஆங்கில

வேதாகமத்தில் கிறிஸ்தவர்கள் என்று **அழைக்கப் பட்டார்கள்** என்றுள்ளது. யார் இப்பெயரை வழங்கியது, யாரால் இவ்விதம் அழைக்கப்பட்டார்கள் போன்ற விபரங்கள் அங்கு இல்லை.

ஆனால், எது வேண்டுமோ அது நமக்கு இருக்கிறது. அதாவது, **கிறிஸ்தவன்** என்னும் இந்த உன்னத பெயருக்கு தேவ அங்கீகாரமும், மனித அங்கீகாரமும் கிடைத்துள்ளது. பேதுரு அப்போஸ்தலன் தனது முதலாம் நிருபத்தில் இவ்விதம் எழுதியுள்ளார். **ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடு பட்டால், வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன்** என்று [I பேதுரு 4:16]. ஆக, இவ்வார்த்தையை, யார் வழங்கியிருந்தாலும் ஆவியானவர் அங்கீ கரித்துள்ளார். அதுபோல, அகிரிப்பா ராஜா தனக்கு முன்பாக ஒரு விசாரணைக் கைதியாக இருந்த பவுலை நோக்கி: **நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்** [அப்.26:28]. ஆக, அன்றைய உலகின் மனிதர்களாலும் அறியப்பட்ட வார்த்தை களாகவே இது இருந்துள்ளது.

இந்த உயரிய வார்த்தைக்கு உரியவனாக ஒருவன் தன் பிறப்பால் உரிமை கோர முடியாது. பூமியில் பிறக்கும்போது ஒருவன் கிறிஸ்தவனாகப் பிறக்க முடியாது. ஒருவேளை கிறிஸ்தவ குடும்பத்தில் பிறக்கலாம். ஒருவன் கிறிஸ்தவனாக மறுபிறப்படைவதற்கு [யோவான் 3:3–5] தேவனிலும், இயேசுவிலும் விசுவாசம் கொண்டு [மாற்கு 16:16], மனந்திரும்பி [அப்.2:38], இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு [அப்.8:36], பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் [அப்.22:16].

அன்பானவர்களே! அப்படிப்பட்ட கிறிஸ்தவன் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொண்டு [பிலி2:5] கிறிஸ்துவின் அடிச் சுவடுகளைப் பின்தொடர்ந்து நடக்க வேண்டியவனாயுள்ளான் [I பேதுரு.2:21] வேதாகமத்தின்படியான கிறிஸ்தவன் மன்னிக்கும் சுபாவம் உடையவனாக [மத்.4:32] மொழி, நிறம், ஜாதி, அந்தஸ்து போன்ற தாழ்ந்த உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவனாக [கலா.3:27,28;யாக்.2:1,9], பக்தி வாழ்வில் பரிசுத்தமுள்ளவனாக இருக்க வேண்டும். [எபி.12:14]. ஆனால், இன்றைய கிறிஸ்தவர்களின் யதார்த்த நிலை இப்படியா இருக்கிறது? வருடத்தின் இறுதியிலே நின்று கொண்டிருக்கும் நாம் நெஞ்சிலே கையை வைத்து சிந்திப்போம். இதுவரையிலான என் பக்தி வாழ்வில், அவருக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை நாம் கொடுக்கவில்லை என்பதை வெட்கத்தோடும், மனத்தாழ்மை யோடும் ஏற்றுக்கொண்டு, புது சிருஷ்டியான வாழ்வுக்கு[II கொரி.5:17]. நம்மைத் தயார்படுத்துவோம்! ஆமென்!!

# சத்தியத்தை நேசித்தல்

Bro. J.C. **சோட்**

சென்ற மாத தொடர்ச்சி...

**மே**ற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில் பவுல் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை கவனித்தீர்களா? அநேகர் சத்தியத்தை நேசியாதபடியால் தவறானவைகளைப் பின்பற்றுவார்களென்றும், சத்தியத்தின் மீதான அவர்களுடைய அன்பு குறைச்சலினால் அவர்கள் வஞ்சிக்கப்பட தேவன் அனுமதிப்பாரென்றும் பவுல் சொல்லியிருக்கிறார். அதற்கு அப்பால் அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார் என்றும் நாம் பார்க்கிறோம்.

எதற்காக தேவன் இவைகளெல்லாம் செய்வார்? ஏனென்றால், சத்தியத்தை நேசிக்காதவர்களை தேவன் இவ்விதமாகத் தான் நடத்த விரும்புவார். அவர்கள் சத்தியத்தை விரும்பவில்லை. அவர்களுக்கு அற்புதங்கள் அடையாளங்கள், வல்லமை போன்றவைகளில்தான் விருப்பமிருக்கிறது. இந்த வல்லமைகள் இவைகளுக்கெல்லாம் சாத்தான் தான் பொறுப்பு என்று தெரிந்தாலும் கூட அதைப் பற்றி பொருட்படுத்தாமல் அது அவர்களுக்குத் தேவை என்று விரும்புகிறார்கள். அவர்கள் செவித்தினவுள்ளவர்களென்று பார்க்கிறோம், அதாவது, எப்போதும் புதிய புதிய காரிங்களை கற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்கள் என்பது இதன் பொருளாகும்.

பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள். ஏனென்றால், அவர் கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போ தர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத் திற்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும்[II தீமோ: 4:3,4].

ஏசாயாவும், அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத் தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும் நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும் படிக்கும்,

அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி அவர்கள் இருதயத்தை கடினமாக்கினார் என்றான். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்[யோவான்12:40,43].

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில், முதல் நூற்றாண்டு ஜனங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம். இன்று நிலைமை எப்படி இருக்கிறது? அதேவிதமான நிலைமைதான் நிலவுகிறது. இன்றைய நாட்களிலும் செவித்தினவுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் புதிய காரியங்களை கற்றுக் கொள்ளத் தங்கள் செவிகளைத் திறக்கிறார்கள். இன்னும் பலர், தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புகிறார்கள்.

இன்றைய நாட்களிலும் காரியங்கள் அதேவிதமாகத்தான் இருக்கிறது. உங்களைச் சுற்றிலும் பாருங்கள். இன்று நாம் எதைக் காண்கிறோம்? மத சம்பந்தமான காரியங்கள் என்று வரும் போது ஜனங்கள் எதற்குப் பின்னாலும் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்கள். மேலும், புதிதாக ஓர் உபதேசம் பரப்பப்படும் போது அது தேவனுடைய வார்த்தையின் போதனைகளுக்கு எவ்வளவு அந்நியமாக இருந்தாலும், திரளான ஜனங்கள் அதற்குப் பின்னால் செல்வதை நம்மால் பார்க்க முடிகிறது. ஏன் அப்படிச் செல்கிறார்கள்? ஏனென்றால், அவர்களுக்கு சத்தியத்தில் விருப்பமில்லை – அவர்கள் சத்தியத்தை நேசிப்பதில்லை.

தேவனுடைய வார்த்தையோடு விளையாடுவது மிகவும் அபாயகரமானது. மனுஷருடைய உபதேசங்களைப் பின்பற்றுவதும் அபாயகரமானது. நம்மிடத்தில் சத்தியம் காணப்படும்படியாகத்தான் தேவன் தம்முடைய வார்த்தையைக் கொடுத்தார். அதை நாம் விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியும் போது நாம் இரட்சிக்கப்படுவோம். தேவனுடைய வார்த்தையின் இடத்தை இவ்வுலகில் வேறு எதுவும் பிடிக்க முடியாது. தேவனுடைய வார்த்தைக்கு ஈடு இணை எதுவுமில்லை. பவுல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்க ளுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்று சொன்னார் [கலாத்தியர் 1:7–9] ✝

பெண்கள் பகுதி

# ஏதேன் தோட்டம்

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! 2020-ம் ஆண்டு நிறைவடையப் போகிறது. பல நம்பமுடியாத, எதிர்பாராத, விடை கிடைக்காத சவால்களை சந்தித்து விட்டோம். நமக்கு நாமே பல கேள்விகளைக் கேட்டு, குழம்பிப்போய் எப்படியோ காலங்களைக் கழித்துவிட்டோம். எல்லாருடைய கேள்வியும் தேவன் இப்படிச் செயல்படும்போது நாம் என்ன செய்ய இயலும் என்பதே. ஆண்டு இறுதியில் உலக சிருஷ்டிப்பின்போது நடந்த சம்பவங்களைப் பார்க்க கொஞ்சம் திரும்பிச் செல்வோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினவர் மூவரின் செயல்பாடும். சிருஷ்டிப்பில் வெளிப்படுகிறது. வல்லமையும் மகிமையும், மாட்சியும், திட்டங்களும், காலங்களும், சகல ஞானமும், இப்படி அனைத்துமேயுடைய தேவனின் சிருஷ்டிப்பின் நிறைவாக ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தார். அவர்கள் பெயர் ஆதாம், ஏவாள். இவர்கள் இருவருக்கும் ஏதேன் தோட்டம் தான் வீடாக இருந்தது. [ஆதி 2:4-17].

**அந்த தோட்டத்தில் மூன்று வகையான மரங்கள் இருந்தன**

1. சகலவித விருட்சங்கள்
2. நன்மை, தீமை அறியத்தக்க விருட்சம்
3. ஜீவ விருட்சம்.

வேலை செய்து பிழைக்க வேண்டும் என்பது தேவ திட்டம். கையினால் வேலை செய்ய வேண்டும். இருதயத்தில் அவரை நினைக்க வேண்டும். வேலை செய்யாமல் சோம்பேறிகளாய் இருப்பவர்கள் பரலோகம் செல்ல முடியாது [I தெச : 5:6-13].

தேவன் நம் தகப்பன். ஒரு தகப்பனைப் போல் ஏவாளை கொண்டு வந்து ஆதாமின் கையில் கொடுத்து திருமண உறவை ஏற்பாடு செய்தார். இந்த இடத்தில் தகப்பன்மார்களுக்கு ஒரு பாடம் இருக்கிறது. தகப்பன் உதவி இல்லாமல் ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளவே கூடாது. ஏதேன் தோட்டத்தில், பாவம்

பிரவேசிப்பதற்கு முன்பு அவர்கள் இருவருக்குள்ளே வெட்கம் என்பது இல்லை. யதார்த்தம் காணப்பட்டது. பயம் இல்லாதிருந்தது.

பின்பு, சாத்தானின் உட்பிரவேசம். முதலாவது, அவன் தேவனின் வார்த்தையின் மீது ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தி பின்பு அதை மறுதலிக்ககச் செய்து விடுகிறான். மனிதன் அடிக்கடி தேவனின் பார்வையிலிருந்து தப்பித்து, ஒளிந்து விடலாம் என்று நினைக்கிறான். ஆனால் அதிலே தோற்றுத்தான் போகிறான். [யோனா . 1:116]. தேவன் பார்வையிலிருந்து நாம் தப்பிக்கவே முடியாது [எரே:23:24; எபி:4:13]. பாவத்திற்கு பிறகு ஆதாமும், ஏவாளும், அழிவில்லாமையிலிருந்து அழிவைப் பெற்றுக் கொண்டார்கள். பரிசுத்தம், நித்தியம் இவைகளை இழந்து விட்டார்கள். ஆனால் பூமியில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பாவத்தின் ஆரம்பம் இது தான். அதாவது, அழிவை சம்பாதித்த அல்லது பாவம் செய்த மனிதனை மீண்டும் தன்னோடு சேர்த்துக் கொள்ளுவதற்கான திட்டம் தான் மீட்பின் திட்டம்.

புதிய ஏற்பாட்டிலே, யோவான் [I:29-37]உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி இயேசு கிறிஸ்து என்று பார்க்கிறோம். பாவம் செய்த ஆதாம், ஏவாளிடம் தேவன் கோபப்பட்டு, சத்தம் போட்டு, எரிச்சலுடன் வரவில்லை. மோசே சீனாய் மலையில் தேவனிடம் ஏறிப் போனபோது அங்கு நடந்த பயங்கரங்களைப் பார்த்து இஸ்ரவேல் ஜனங்கள் மோசே நீர் எங்களோடு பேசும், தேவன் பேச வேண்டாம் என்றார்கள். ஏனென்றால், அக்காட்சி மகா பயங்கரமாயிருந்தது. ஆனால் இவர்களிடம் ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? என்று கேட்டார். அப்பொழுது அவர் உள்ளத்தில் எவ்வளவு பாடுகளும், வேதனையும் இருந்ததோ அது அவருக்குத்தான் தெரியும். தேவனுக்கு அவர்கள் எங்கேயிருந்தார்களென்று தெரியாமல் இல்லை. அவர்கள் எங்கே இருந்தார்களென்று அவர்களுக்குத் தெரியவேண்டும் என்பதே தேவனின் எதிர்பார்ப்பு. நம் நிலைமையை நாம் உணரவேண்டும். உலகத்தில் உள்ள எல்லா மதங்களிலும் தங்கள் தேவர்களைக் காண ஊர் ஊராக சுற்ற வேண்டியுள்ளது. ஆனால், நம் தேவன் நம்மைத்தேடி வருகிறார், நாம் தொலைந்துபோகும் போது தேவனின் அன்பைப் பாருங்கள். ஏதேனில் தொலைந்த தன் பிள்ளைகளைத் தேடி வந்தார்.

இயேசு கிறிஸ்து இழந்து போனவர்களை இரட்சிக்கத்தான் வந்தார் [லூக்: 19:10] ஒருவரும் கெட்டுப் போவது தேவனுக்கு பிரியமல்ல [II பேதுரு: 3:9].

ஏதேனில் ஆதாமோ, ஏவாளோ தங்கள் தவறுகளை ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால் தேவனின் அன்பு, கிருபை இரக்கம் இம்மூன்றும் சேர்ந்து செயல்பட்டது. இவைகளுக்குப் பதிலாக தங்கள் வெட்கத்தை மூட தோலுடையை கொடுத்தார்.

அன்றைக்கே மனிதனின் வெட்கத்தை மூட ஒரு பாவமும் செய்யாத குற்றமற்ற ஒரு மிருகம் பலியாக்கப்பட வேண்டிய தாயிற்று. ஏதேன் தோட்டத்தில் நடந்த அதே நிகழ்வு பல காலங்கள் கடந்து காலங்களின் தேவன் கெத்சமனே தோட்டத்தில் பாவம் என்ற வெட்கத்தை மூட நிரந்தரமாக தன் ஒரே பேறான குமாரனை மனதார நமக்காகப் பலியாக்கினார். இயேசுவின் தியாகம், ஏதேன் தோட்டத்தில் ஆதி3:15 ல் தேவன் கூறிய வாக்குத்தத்தமான ஸ்திரீயின் வித்து மூலம் பாவநிவாரணம் கிடைக்கச் செய்தார். இதுதான் மாபெரும் சுவிசேஷம். ஒருவர் மரிக்காதிருக்க இன்னொருவர் மரிக்க வேண்டியதாயிருக்கிறது. [அப் 2:30–34]; [வெளி13:8].

ஏதேன் தோட்டத்தின் முதல் சாவே சாத்தானை தோற்கடிக்கத் தான். சிலுவையை நாம் அங்கேயே காணமுடியும். ஆதாமும், ஏவாளும் தங்களைத் தாழ்த்தி தேவனின் உடையை உடுத்திக் கொண்டார்கள். விளைவு நிச்சயம். ஆனால், தோட்டத்தில் இருக்க முடியவில்லை. வெளியே செல்ல வேண்டியதாயிற்று.

அருமையானவர்களே! எல்லா விதத்திலும், எப்பக்கமும் நெருக்கப்பட்டு, செய்வதறியாது இருக்கும் நாம் ஒரே நம்பிக்கையான இயேசுவையும், அவர் வார்த்தையையும் கேட்போம். கீழ்ப்படிவோம். இன்றைக்கு தேவை அதுதான். அப்பபடிச் செய்வோமானால் வரப்போகிற புதிய ஆண்டு தேவனால் வழிநடத்தபடுகிற ஆண்டாக அமையும். ஆமென்.

'**திருமறை ஆசான்**' மாத இதழ் வாசகர் குடும்பத்தாருக்கும், '**திருமறை தியானம்**' தொலைக்காட்சி நேயர்கள் அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

**ஆசிரியர்**

வாலிபர் பகுதி

# தற்பரிசோதனை

**Dr. ஏபில் நாயகம்**

பிரியமானவர்களே, உங்கள் யாவருக்கும் மீட்பராம் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். வருடத்தின் இறுதி மாதத்தில் இருக்கிறோம். கடந்த காலங்களில் நாம் கடந்து வந்த பல ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் 2020ஆம் ஆண்டு மிகவும் வேறுபட்ட ஒரு ஆண்டாகவே இருக்கும். இது நமக்கு மட்டுமல்ல உலகமெங்கும் வாழ்கின்ற அனைவருக்குமே 2020ஆம் ஆண்டு வழக்கத்திற்கு மாறான ஒரு ஆண்டாகவே இருக்கும். அதற்கான காரணம் என்றழைக்கப்படும். கொரோனா வைரஸ் என்ற ஒருவகை நோயினால் ஏற்பட்ட பாதிப்புகளும் இழப்புகளும் தான். கிருமியின் வீரியம் தற்போது குறைந்து இருக்கிறது என்று சொல்லலாம். கொரோனா நோய் தடுப்பு மருந்துகளை கண்டு பிடிக்கும் பணியில் மருத்துவ மற்றும் விஞ்ஞான உலகம் முழுவதுமாக செயல்பட்டு கொண்டு வருகிறது. நல்ல விஷயம் தான். அது ஒருபுறம் இருக்கட்டும்.

வருடத்தின் இறுதி வரைக்கும் வந்திருக்கும் நாம் இந்த வருடத்தைப் பின்னிட்டு பார்க்கப்படுவோம். நாம் நம்மை தற்பரிசோதனை செய்வதற்கு வருடத்தின் இறுதி நாட்களைப் போல சிறந்த தருணம் எதுவும் இல்லை. கடந்து வந்த நாட்களை திரும்பிப் பார்த்தால் நம்பிக்கை இல்லாத நிச்சயமற்ற நாட்களின் எண்ணிக்கை தான் அதிகமாக இருக்கும். நம் குடும்பத்தினரோ அல்லது நண்பர்களோ அல்லது தெரிந்தவர்கள் ஒரு நோயினால் பாதிக்கப்பட்டு இந்த வருடத்தை கடக்காமல் மரித்திருப்பார்கள். ஆனால், இவை அனைத்தையும் கடந்து தேவன் நம்மை வாழ அனுமதித்திருக்கிறார் என்றால் அது ஏன் என்ற கேள்வி நமக்குள் வரவேண்டும். இந்த வருடத்தை கடக்காமல் மரித்தவர்கள் பாவிகளும் அல்ல உயிரோடு இருக்கின்ற நாம் நீதிமான்களும் அல்ல. இதைத் தாண்டி நீங்களும் நானும் உயிரோடு இருக்கிறோம் என்றால் அதற்கு நிச்சயம் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். தேவனுடைய கிருபை காலைதோறும் புதிதாய் இருக்கிறது என்று புலம்பலில் வாசிக்கின்றோம். அப்படியானால், தேவனுடைய கிருபையினால் மட்டுமே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படி வாழ்கிற நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள

வேண்டும். தேவன் ஏதோ ஒரு நோக்கத்தோடு தான் அவர் கிருபையை நம் மீது பொழிந்து இருக்கிறார். அதைக் கண்டுபிடித்து நிறைவேற்றுவதைத் தவிர சிறப்பான செயல் வேறு இருக்க முடியும்.

இந்த பூமியில் வாழ்க்கையின் நோக்கத்தை புரிந்து கொண்டவர்கள் சிலரே. அந்த சிலரில் சிறந்தவர் அப்போஸ் தலனாகிய பவுல். பிலிப்பியர் நிருபத்தில் **கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்** என்று வைராக்கியத்துடன் சொல்வதை நாம் வாசிக்க முடியும். கிறிஸ்துவுக்காக வாழ்வதும், பாடுபடுவதும் அவரின் வாஞ்சையாக இருந்தது. அவர் பெற்றுக் கொண்ட இரட்சிப்பையும், அவர் ருசிபார்த்த கிருபையையும் பறைசாற்றுவது பவுலுக்கு இணை யாருமில்லை. தன் மனதில் இருந்த வாஞ்சையை அவர் செயலில் காட்டினார். எதற்காகப் பிடிக்கப்பட்டாரோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் என்று பிலிப்பியர் 3:12 ல் சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். பவுலை அழைத்தவர் நம்மையும் அழைத்திருக்கிறார். நம்முடைய மனதில் பவுலைப் போன்று வாழ்வின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு அதை நிறைவேற்ற வாஞ்சையாக இருக்கிறோமா? அப்படி வாஞ்சையுடையவர்கள் அதை செயலில் காட்டுகிறோமா? வருடத்தின் இறுதியில் ஆத்ம பரிசோதனை செய்து கொண்டிருக்கிற நாம் இந்த கேள்விகளை சிந்தித்துப் பார்க்கவேண்டும்

அப்போஸ்தலனாகிய பவுல் போல நோக்கத்தோடு வாழ்வை புரிந்துகொள்ள அவருக்கு அடித்தளமாக இருந்தது கலாத்தியர் 2:20 ல் அவர் கூறிய வசனமே. கிறிஸ்து உடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். அவருக்கு இருந்த உறுதியும், வைராக்கியமும் அவரை பிரபலமாக இருந்திருக்கிறது என்பதை புரிந்து கொள்வதில் எந்த சிரமமும் இல்லை. சுயத்தை வெறுத்து கிறிஸ்துவுக்காக பிழைத்திருக்கிறார் என்றால் அவருக்கு இருந்த

வைராக்கியம் சாதாரணமான ஒன்றாக இருந்திருக்க முடியாது. சரி எப்படி அவளுக்கு இந்த வைராக்கியம் சாத்தியமாயிற்று? ரோமர் 12:1,2 ரோமாபுரிக்கு கொடுக்கப்படும் அறிவுரையை கவனியுங்கள். உங்கள் சரீரங்களை பரிசுத்தம் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று உலகத்திற்கு ஒத்த வேஷம் தணியாமல் என்றும் தேவனுடைய பரிபூரண சித்தத்தைப் பகுத்தறிய வேண்டும் என்றும் மனம் புதிதாகி மறுரூபம் ஆக வேண்டும் என்றும் கூறுகிறார். இந்த நான்குகாரியங்களும் நமது அன்றாட வாழ்வின் செயல் ஆக இருக்கவேண்டும். சொல்லப்போனால், இந்த நான்கு ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் மையமாக இருக்க வேண்டும். இந்த நான்கு காரியங்களும் நமக்கு புதிதானது அல்ல. நாம் அனைவரும் அறிந்தவைகளே. ஆனால், இதை நம்மில் எத்தனை பேர் செயல்படுத்துகிறோம்? நம் அன்றாட வாழ்வில் நம்மையும் நம் விசுவாசத்திற்கும் செயல்பாட்டிற்கும். சம்பந்தமே இல்லாத அறியாமல் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. இதையும் சிந்தியுங்கள்

யோவான் 4:30 ல் ஆண்டவராகிய இயேசு நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்று சீடர்களிடம் கூறுகிறார். தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவே தான் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவது தன் தலையாய கடமை என்று சொல்கிறார் என்றால், கிருபையினால் தேவனுடைய பிள்ளைகளாய் மாற்றப்பட்ட நாம் எவ்வளவாய் நம் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். ஜெபத்தோடு சிந்தனை செய்யுங்கள். இந்த ஆண்டை ஆண்டைக் கடக்க தேவன் நமக்கு உதவியாயிருக்கிறார். இது அவருடைய கிருபை. இப்படிப்பட்ட பெற்ற நாம் அதற்கு எப்படிப்பட்ட நன்றியோடு இருக்கிறோம். இயேசுவைப் போல அப்போஸ் தலனாகிய பவுல் போல நம் வாழ்க்கையின் நோக்கத்தை புரிந்துகொண்டு புதிய வைராக்கியமான ஒரு கிறிஸ்தவனாக அடுத்த ஆண்டிலிருந்து வாழ ஒரு தீர்மானம் எடுப்போம். கிருபையை அலட்சியமாய் எண்ண வேண்டாம். ஆமென் ✝

சிறுவர் பகுதி

# உன் விசுவாசம் பெரியது

Dr. பிரைய்ஸி

**ஹா**ய் குட்டீஸ்! நீங்களெல்லாரும் நலமாயிருக்கிறீர்களென்றும் கட்டுரைகளைத் தவறாமல் வாசிக்கிறீர்களென்றும் நம்புகிறேன். இந்த வருடம் மிகவும் வித்தியாசமான ஒன்றாகவே இருக்கிறது. இக்கொடிய கொள்ளை நோய் மத்தியிலும் தேவன் நம்மை பாதுகாப்பாக ஆரோக்கியமாக வைத்திருக்கிறபடியால் நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். இம்மாதம் தேவன் உங்களைப்பாதுகாத்து, அவருடைய சிறகுகளின் கீழ் வைத்திருக்கிறபடியால் அவருக்கு நாம் எப்படி நன்றியுள்ளவர் களையிருக்க வேண்டுமென்று சொல்லப் போகிறேன்.

II நாளாகமம் 32 ஆம் அதிகாரத்தில் எசெக்கியா ராஜா, அசீரியசாவின் ராஜாவாகிய சனகெரிப் யூதாவின் மீது படையெடுத்து வந்த போதும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பேசினபோதும் தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாயிருந்ததை நாம் பார்க்கிறோம். யுத்த காலத்தின்போது எசேக்கியா ராஜாவும், யூதாவின் ஜனங்களும் தேவனை நோக்கி மன்றாடினபடியால் அவர்களுடைய **உறுதியான விசுவாசத்தின் நிமித்தம்** தேவன் தம்முடைய ஜனங்களைப் பாதுகாத்தார்.

II நாளாகமம் 32:24 ல் எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். தேவன் அவருக்கு தயவு பாராட்டி குணம் கொடுத்தார். ஆனால் எசேக்கியா அதற்காக தேவனுக்கு நன்றியாயில்லாமல் மிகவும் பெருமையாக இருந்தார் அதினிமித்தம் அவர்மீது கடுங்கோபத்தில் இருந்தார். பின்னர் எசேக்கியா தன் தவறை உணர்ந்தபடியால் தேவன் அவரை மன்னித்தார். எசேக்கியாவும் அதற்குப் பிறகு வாழ்வில் புதிய உயரங்களைத் தொட்டார்.

எனவே, சிறுபிள்ளைகளே! உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும்போது, இந்த எசேக்கியா ராஜாவைப் போல்

கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது உங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்து. தேவனுடைய உன்மைத் தன்மைக்காகவும், அபரிதமான அன்புக்காகவும் நன்றி யுள்ளவர்களாக இருங்கள். இந்த எசேக்கியா ராஜாவைப் போல உங்கள் தவறுகளை திருத்திக்கொண்டு, தேவனிடம் மன்னிப்புக் கேட்டு அவருடைய இரக்கத்திற்காக நன்றி செலுத்துங்கள். வாழ்வில் புதிய உச்சங்களைத் தொட முடியும்.

**அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

**சிறுவர்களுக்கான வேத வினாப்போட்டி (நியாயாதிபதிகள்)**

- எருசலேமுக்கு விரோதமாகப் போர்தொடுத்தது யார்?
- அசிரீயா ராஜாவுக்கு பிற்பாடு என்ன நடந்தது?
- போரின்போது எசேக்கியா ராஜாவோடு தேவனை நோக்கி வேறு யாரெல்லாம் ஜெபித்தார்கள்?
- எசேக்கியா ராஜாவை சுகப்படுத்தினது யார் ?
- எசேக்கியா ராஜாவின் குமாரன் யார்?

## இயேசுவின் ஜெபத்தில் - பிதா

1. பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே (லூக் 11.2)
2. பிதாவே – ( யோவான் 17:2,5,21,24)
3. பரிசுத்த பிதாவே (யோவான் 17:11)
4. நீதியுள்ள பிதாவே (யோவான் 17:25)
5. அப்பா பிதாவே (மாற்கு 14:36)
6. என் பிதாவே – (மத் 26:42)
7. பிதாவானவரே – (யோவான் 14:10)

# வளமான வாழ்விற்கான வார்த்தைகள்

Bro. **பென்னி மார்ட்டின்**

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். மண்ணுலகை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விண்ணுலகையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரத் துடிக்கும் மனிதனைக் கண்ணுக்குத் தெரியாத கிருமி ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. சீனாவைப் பூர்வீகமாகக் கொண்ட இந்த கொடூர கொரோனா வைரஸ் பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து உலகெங்கும் வலம் வந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒட்டு மொத்த உலகத்தையும் தொட்டுப்பார்த்து விட்ட இந்த கிருமியைக் கட்டுப்படுத்த வழி தெரியாமல் மனிதஇனம் விழிபிதுங்கி நிற்கிறது. பொதுவாக, இவ்வுலகில் ஏதாவது ஒரு விஷயம் மிக வேகமாக பரவுகிறதென்றால் அதை வைரலாகி வருகிறதென்று விளையாட்டாகச் சொல்வார்கள். அது உண்மைதான் என்று உலகிற்கு உரக்கச் சொல்லியிருக்கிறது கிரீட உருவம் கொண்ட இந்தக்கிருமி. ஒரு விதத்தில் பார்த்தால் இந்தக்கிருமி இவ்வுலகில் ஏழை பணக்காரர் ஜாதிமத பேதங்கள் ஒன்றுமில்லை, எல்லோரும் ஒன்றுதான் என்ற சமத்துவத்தை சமத்தாக கற்றுக்கொடுத்திருப்பது போல் தெரிகிறது. அகிலத்தில் அரங்கேறிவரும் அன்றாட நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து இதுதான் உலகத்தின் முடிவு என்று பல ஆவிக்குரிய ஆசாமிகள் ஆருடம் கூறி அசத்தி வருகிறார்கள். தடுப்பூசி கண்டு பிடித்துவிட்டதாக மருந்து நிறுவனங்கள் வரிந்து கட்டிக் கொண்டு வரம்பு மீறி செயல்பட்டாலும் கூட பலன் எப்படி என்பது பல நாட்கள் கழித்தே தெரிய வரும்.

பிரியமானவர்களே! இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் நலம் விசாரிப்பதை வழக்கமாக, பழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நாம் நம் உறவினர்களையோ அல்லது தெரிந்தவர்களையோ நேரில் காணும்போதோ தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்போதோ நலம் விசாரிக்கிறோம். அப்படிச் செய்யும்போது பெரும்பாலும் நாம் உடல்நலம் பற்றித்தான் உளமாற விசாரிக்கிறோம். மனநலம் பற்றி விசாரிப்பதில்லை. ஒருவர் நோயே இல்லாமல் இருப்பது மட்டும் அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்பதற்கான அடையாளமோஅல்லது அளவுகோலோ அல்ல. இன்றைய

நாட்களில் பலர் குடும்பச்சூழல் சுற்றுச்சூழல், காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். உடல்நலம் குன்றிவிட்டால் மருந்து மாத்திரைகள் என பல வழிகள் உண்டு. ஆனால், மனநலம் குன்றிவிட்டால் வழி என்ன? தேவன்அதற்கான வழியை வேதாகமத்தில் மாத்திரமே வைத்திருக்கிறார். மனிதனுக்காக எழுதப்பட்ட மிகச்சிறந்த புத்தகம் வேதாகமத்தைத் தவிர வேறு இல்லை. இதை வேதாகமத்தின் வார்த்தைகள் மறுபடியும் மறுபடியும் நிரூபிக்கின்றன. வேதாகமம் தொன்றுதொட்டு தொடர்ச்சியாக மனித இனத்திற்கான வழிகாட்டி புத்தகமாகத் திகழ்ந்து வருகிறது. அதுவும் குறிப்பாக, பிலிப்பியர் நிருபத்தில் நான்காம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை விட மனித நலனுக்காக தேவ வசனங்கள் வேறெங்கும் இல்லை.

**கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும்**

மனிதன் திரைக்கடலோடி திரவியம் தேடுவதும், திரைக்குப் பின்னால் பல பாடுகளைப்படுவதும் சந்தோஷமாக இவ்வுலகில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். இவ்வுலகில் மனிதன் சந்தோஷமாக இருப்பதற்கு பல தத்துவ ஞானிகள் தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்கள். ஆனாலும் சந்தோஷம் சமரீதியாக மனித இனத்துக்கு கிடைத்த பாடில்லை. மனிதன் மகிழ்ச்சியாயிருப்பதற்கு உலகம் கொடுக்கும் விளக்கம் வேறு, வேதாகமம் கொடுக்கும் விளக்கம் வேறு . தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். இது உடலை வளைத்து நெளித்து செய்யும் ஓர் உடற்பயிற்சி அல்ல. மாறாக, இது மன ரீதியான ஓர் உடற்பயிற்சியாகும். ஒரு கிறிஸ்தவன் மகிழ்ச்சியாயிருந்து தேவனிடத்தில் எல்லாவிதத்திலும் நன்றியுள்ளவனாயிருக்க பல காரணங்கள் உண்டு. கிறிஸ்து நமக்காக செய்த நன்மைகளைத் தாண்டி, அவர் நமக்காக செய்த தியாகங்கள் நம்மைத் தூண்டி மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். ஆனால், உலகக் கவலைகளும், மனச்சோர்வுகளும் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய மகிழ்ச்சியை மங்கச் செய்து விடுகின்றன. இவ்வுலகில் ஒருவர் சோகத்தின் உச்சகட்டத்திற்குப் போகும்போது, மனோதத்துவ நிபுணர்கள் அவர்கள் சிரித்து மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த ஆலோசனை ஆரம்பத்திலேயே வேதாகமத்தில் தேவனால் வெளிப்படுத்த ப்பட்டிருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் புதிதாக கண்டு பிடித்து விட்டோம் என்று மெச்சிக்கொள்ள இங்கே ஒன்றுமேயில்லை.

**II நம் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிய வேண்டும்**

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள் என்று மலைப்பிரசங்கத்தில் நாம் மலைத்து போகத்தக்க நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார். கோபத்தில் யோசனையின்றி ஒரு நிமிடத்தில் செய்யும் செயல் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே வியர்த்தமாக்கிவிடுகிறது. சாந்த குணமுள்ளவர்களை இவ்வுலகம் எப்போதுமே மதித்து வந்திருக்கிறது. அவர்களுடைய பெயர்கள் இன்னும் வரலாற்றுச் சுவடுகளில் சுடர்வீசிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அகங்காரத்துடன் வாழ்ந்தவர்களுடைய பெயர்கள் மண்ணோடு மண்ணாக மக்கிப் போய்விட்டன. நான் எந்நிலமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்க மருந்தொன்றும் இவ்வுலகில் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அது நாமாகவே கற்றுக்கொள்ளும் கலையாகத்தான் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் (பிலிப்பியர் 4:11) ல் நான் எந்நிலமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டேன் என்று சொல்கிறார். நாம் எதற்கும் பதட்டப்படாமல் கோபப்படாமல் சாந்தமாக இருக்க வேண்டுமென்றுதான் மனோதத்துவ நிபுணர்களும் ஆலோசனைகளை அவர்கள் வழங்கி வருகிறார்கள். இந்த ஆலோசனையும் ஆரம்பித்திலேயே தேவனாலே நமக்குக் கொடுக்கப்பட்ட ஒன்றுதான். மனோதத்துவ நிபுணர்கள் நாங்கள் புதிதாக கண்டுபிடித்துவிட்டோம் என்று மெச்சிக்கொள்ள இங்கு ஒன்றுமே இல்லை.

**III நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் இருக்க வேண்டும்**

இது மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் நாம் செய்ய வேண்டிய உடற்பயிற்சியாயிருககிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 6 ஆம் அதிகாரத்தில் பல முறை கவலைப்படாதிருங்கள் என்று சொல்லியிருந்தாலும் கூட பல சந்தர்ப்பங்களில் கவலை வந்து நம்மை கவ்விக்கொள்கிறது. கவலை என்பது நம் வாழ்க்கைப் பயணத்தில் அழையா விருந்தாளியாக வந்து நம்மை அலைக்கழித்து நம்மை நிலை குலையச் செய்கிறது. இவ்வுலகில் நாம் வாழத் தேவையானவைகள் எவைகள் என்பது நம்மை விடத் தேவனுக்குத்தான் நன்றாகத் தெரியும். அதனால்தான் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்று வேதகாமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் புதிதாக கண்டு பிடித்து விட்டோம் என்று மெச்சிக்காள்ள இங்கே ஒன்றுமேயில்லை. நாம் கவலையை

களைந்தெறிய ஆவிக்குரிய காரியங்களில் ஆழமாக இறங்கலாம். ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும்போது நாம் வேத வசனங்களை தியானிக்கலாம், ஆவிக்குரிய வளர்ச்சிப்பற்றி ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வமுள்ளவர்களோடு ஆலோசிக்கலாம், சபையின் எல்லா நிகச்சிகளிலும் கலந்து கொள்ளலாம், நோயாளிகளைப் போய் சந்திக்கலாம், இவ்விதமாக பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். இன்று மனோதத்துவ நிபுணர்கள் மனச்சோர்வு ஏற்படும்போது, ஏதாவது ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்குகிறார்கள்.

**நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும்.**

நம் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும்போது நம் நண்பர்களிடம் தெரியப்படுத்துகிறோம், நம் உறவினர்களிடம் தெரியப்படுத்துகிறோம். அதனால் பிரச்சனைகளுக்கு தீர்க்கமான தீர்வு ஏற்படுவதில்லை. அப்படியே தீர்வு உண்டானாலும் கூட அது பக்க விளைவுகளை உண்டாக்குகிற தீர்வாகத்தான் இருக்கும். மருத்துவ ரீதியாக நம் கவலைகளை, பிரச்சனைகளை நமக்குள்ளேயே அடக்கிவைக்காமல் பிறரிடம் பகிர்ந்து கொள்ளும்போது பாரம் குறைவதாகச் சொல்லப்படுகிறது. சில வேளைகளில் நம் பிரச்சனைகளை பிறரிடம் தெரியப்படுத்தும்போது அது மற்றுமொரு மிகப்பெரிய பிரச்சனைக்கு வழிவகுத்துவிடுகிறது. எனவே தான், நாம் ஒன்றுக்கும் கவைலைப்படாமல் எல்லாவற்றயும் குறித்து நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். இன்றைய நாட்களில் மனநலம் என்பது உலக மக்களால் அதிகமாகப் பேசப்படும் விஷயமாக இருக்கிறது. மனநலத்தை மேம்படுத்த மொத்த சொத்தையும் விற்று மனோ தத்துவ நிபுணர்களை நோக்கி மக்கள் ஆட்டு மந்தையைப்போல் படையெடுப்பது விந்தையாய் இருக்கிறது. ஆனால் மனநலத்திற்காக அதன் மேம்பாட்டிற்காக தேவன் தம்முடைய வார்த்தைகளில் வைத்திருக்கிற ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மனநலமும் மேம்பட்டு, நம் ஆத்துமாவுக்குத் தேவையான ஆகாரமும் தங்கு தடையின்றி கிடைத்து நம் ஆத்துமா வாழ்வது போல் நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்போம் (III யோவான் 2).

✝

# கிறிஸ்துவின் மணவாட்டி

**Bro. பாண்டியன்**

**அ**ன்பின் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும், சமாதானமும் உண்டாவதாக. ஆரம்பத்திலிருந்தே ஆண்டவர் கள்ளத்தீர்க்க தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்லியிருந்தார். அதே வண்ணம் இன்றைய நாள்வரை வேத வசனங்களை சிலர் ஜனங்கள் மத்தியில் ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களாக திரித்து வேறுவிதமாக போதித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதில் ஒன்றுதான் சமீபகாலமாக வலம் வரும் இயேசுவுக்கு சரீர பிரகாரமாக மனைவி உண்டு என்ற கள்ள உபதேசமாகும். அதைக் குறித்து இக்கட்டுரையில் ஆராய்ந்து பார்க்க தேவன் கிருபை செய்வாராக.

அநேகர் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை தீர்க்கதரிசன புத்தகம் என்பதை அறியாமல் அதிலுள்ளதை நேரடியான அர்த்தம் எடுத்துக்கொண்டு, இனிமேல் ஆயிரவருஷம் அரசாட்சி, பரலோகத்திற்கு 144000 பேர் மட்டும் போவார்கள், நட்சத்திரங் களை அணிந்த ஸ்திரீ மரியாள் போன்ற கட்டுக்கதைகளை போதித்து வருகிறார்கள். அதில் ஒன்றுதான் இயேசுவுக்கு மனைவி இருக்கிறார்கள் என்பது. இதற்கு அவர்கள் வெளி 21:2 ல் உள்ள புதிய எருசலேம் நகரத்தைத் தேவனிடம் இருந்து, இறங்கி வரக் கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மண வாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. ஆனால் தீர்க்க தரிசனம் நேரடி பொருள் இல்லாதது என்கிறது.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு மனைவி என்ற அப். உபதேசம் [II பேதுரு 1:20] என்ற அர்த்தத்தில் உருவாக சொல்லப்பட்டுள்ளது. [ஏசா 54:5-8] தேவனுக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் திருமணம் நடந்த உருவகத்தை நாம் எசேக்கியேல் 16 ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அங்கே ஒரு இளம் பெண் கவனிப்பாரற்று நிர் வாணமாக இருந்தபோது தேவனே அவரை கவனித்து அழைத்து உடுத்த உடை கொடுத்து நிர்வாணத்தை மறைத்ததாகவும், பின்பு அவளை மணவாட்டிக்குரிய அலங்காரம் செய்து தாமே அவளை மனைவியாக ஏற்றுக் கொண்டதாகக் காண்கி றோம். இது எதைக் குறிக்கிறது என்று பார்ப்போமானால், எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக் கென்று

ஒரு தெய்வமற்று அதாவது ஆராதனை செய்ய வழியில்லாமல் இருந்த அந்த ஜனங்களே தேவன் தாமே இரக்கப்பட்டு அவர்களை பல அற்புதங்கள் மூலம் பார்வோனிடம் இருந்து விடுதலையாக்கி தம்மை ஆராதிக்கும்படியான சபையாக அவர்களைத் தெரிந்து மோசே மூலம் உடன்படிக்கை செய்து (திருமணம்) கொண்டார். ஆனால் அந்த ஜனங்களை இதை மறந்து போனார்கள் (எரே 2:32) இதையும் தேவன் உருவகமாக ஒரு மனைவி தன் சொந்த புருஷனுக்கு துரோகம் பண்ணுவது போல என்று சொல்லுகிறார். (எரே 3:20,21) பிற்பாடு அவர்கள் எருசலேமில் தொழுது கொண்டதை காரணம் காட்டி எருசலேம் அவர்களுக்குத்தாய் என்று உருவகமாக பார்க்கிறோம். (கலாத் 4:25) இதன் அடிப்படையில்தான் இயேசுவும் எருசலேமே உன் பிள்ளைகளை சேர்த்துக்கொள்ள விரும்பினேன். ஆனால் உங்களுக்கோ மனதில்லை என்று சுட்டி காட்டினார். மத் 23.37. அதே போல இந்த ஜனங்களுக்கு தகப்பனும் தாயுமாக ஆபிரகாம், சாராள், சொல்லப்பட்டுள்ளது. (ஏசா 51:2).

புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் இயேசு அன்பு கூர்ந்து, பாவ மன்னிப்புக்கு என்று இரத்தம் சிந்தி சம்பாதித்து கொண்ட சபையை மணவாட்டி என்று சொல்லப்பட்டு இருக்கிறது. 2 கொரி 11:2 ல் சபை கற்புள்ள கன்னிகை என்று பவுல் சொல்கின்றார். மேலும், எபேசியர் 5 ம் அதிகாரத்தில் சபை மனைவியாகவும் இயேசு ஆண்டவர் கணவனாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, வெளி 21:2 ன் பஜ சபை மக்களைப் பார்த்து சொல்லும்போது, ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமின் இடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள் என்று காண்கிறோம். எருசலேமை இனி கைவிடப்பட்டவள் என்று சொல்லாமல் வாழ்க்கைப்படும் தேசம் எனப்படும் என்று (ஏசா 62:1-5) ல் காண்கிறோம்.

மேலும், பிலதெல்பியா சபைக்கு எழுத வேண்டியதைக் குறிப்பிட்டபோது, என் தேவனால் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரம் என்று வெளி 3:12 ல் காணப்படும் புதிய எருசலேமும் சபையாரையே குறிப்பதாக உள்ளது. தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மணவாட்டியாக தெரிந்து கொண்டதை எசேக். 16ம் அதிகாரத்தில் வாசித்தோம். அங்கு தேவன் அதற்கு உடுத்த சிறந்த உடைகளை தந்தார் என்று கண்டோம். அதற்கு ஒப்பனையாக வெளி 19:7,8 ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது என்றும் அவருடைய மனைவி உடுத்த சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் கொடுக்கப்பட்டது, அது பரிசுத்தவான்களின் நீதியை குறிப்பதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (வெளி 7:14)

ஆக, தற்போது இயேசுவுக்கு மனைவி சரீரப்பிரகாரமாக உள்ளதாகக் கூறப்படுவது அப்பட்டமான பொய் அல்லது கள்ள உபதேசம் என்று காண்கிறோம். ஐசுவரியம் நிறைந்த ஒரு பெண்மணி தன் கனவில் ஓய்வுநாள் ஆசரிப்பு வந்ததால் தன் முழு சொத்தையும் எழுதி வைத்து செவன்த் – டே – அட்வென்டிஸ்ட் சபை ஆரம்பிக்கப்பட காரணமாக அமைந்தார். அது போல பணம் படைத்த சிலர் தங்களுக்கு இஷ்டமான உபதேசங்களை மக்கள் மத்தியில் பரப்புகின்றனர். அதையும் சிலர் வரவேற்று ஏற்றுக் கொள்கின்றனர். இதைப்பற்றி பவுல் எழுதும்போது அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவு உள்ளவர்களாகி; தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை நாடி சத்தியத்திற்கு (வேதவசனங்கள் கிறிஸ்து உபதேசம்) செவியை விலக்கி கட்டுக் கதைக்கு சாய்ந்து போகிறார்கள், என சாடுகிறார். (2 தீமோ 4:3,4).

வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் வேத வார்த்தைகள் நிச்சயம் நிறைவேறும் என்றார். நான் சொல்லிய வார்த்தைகளே கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்றும் ஆண்டவர் இயேசு சொல்லி இருக்கிறார் அல்லவா? ஆகவே, கள்ள உபதேசங் களுக்கு எச்சரிக்கையாய் இருப்போம். தேவனுடைய அன்பு நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்! ✝

## நன்மை செய்யுங்கள்

1. நன்மை செய்யுங்கள் கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள் (லூக். 6:35)
2. எப்பொழுதும் நன்மை செய்யுங்கள் (1 தெச : 5:15)
3. நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போம் (கலா 6:9)
4. சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்வோம் – (ரோமர் 2:7)
5. நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் (எபி 13:16)
6. நீங்கள் நன்மை செய்கிறதினாலே (1பேது 2:15)

# காலத்தைப் பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள்

**Bro. K.M. பிலிப்**

**அ**ன்பான தேவ மக்களே! இவ்வருடத்தின் நிறைவு மாதத்தில் உங்கள் யாவரையும் மனரீதியாகச் சந்திப்பதில் மன நிறைவடைகிறேன். வாழ்த்துகிறேன். வேதம் நம்மைக்குறித்து நாம் நீதிமான்கள், பரிசுத்தவான்கள், உத்தமர்கள் என்றெல்லாம் பெருமையோடு அழைக்கிறது. இன்னும் ஒரு எதிர்பார்ப்பு, நாம் ஞானமாய் நடந்து, காலத்தை பிரயோசனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பவுலடியார் மூலம் கூறுகிறார். (கொ4:5) உயிரினங்களில் நாட்களை எண்ணும் அறிவை தேவன் மனித இனத்திற்கு மட்டுமே கொடுத்திருக்கிறார். இனம், மொழி, ஏழை , பணக்காரன், படித்தவன் படியாதவன், பக்தியுள்ளவன் பக்தியற்றவன் என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் ஒரு நாளைக்கு24–மணி நேரத்தையே கொடுத்திருக்கிறார். கொடுக்கப்பட்ட இக்காலங்களில் நாம் ஞானவான்களாய் நடந்து ஜனன(பிறந்த)நாளைப் பார்க்கிலும் மரணநாள் நல்லது (பி, 7:11) என்று சொல்லும் அளவில் காலத்தை பிரயோசனப்படுத்த வேண்டும். எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பதைக் காட்டிலும், காலத்தைப் பிரயோசனப்படுத்தி எப்படி வாழ்ந்தோம் என்பதே நம்மை ஞானவான்களாய்த் திகழச்செய்யும்; ஆனால் காலத்தை இழந்தால் மீண்டும் பெறவே முடியாது. 2020–ஆம் ஆண்டின் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம், நாட்கள் பொல்லதவைகளானதால், காலத்தை பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று மீண்டும் பவுல் வலியுறுத்துகிறார். (எபே5:16) ஏனெனில், காலங்கள் நம் கையில் இல்லை என் காலங்கள் உமது கரத்தில் உள்ளது. (சங் 31:15) என்று காலத்தை வென்றெடுத்த தாவீது கூறுகிறார். அன்று கோலியாத்துக்கு முன்பாக தேவ ஜனம் பயந்து, கலங்கி,திகைத்து நின்றவேளையில் தேவபிள்ளை தாவீது அங்கு வருகிறான். சூழ்நிலைகளைப் புரிந்து கொண்ட தாவீது நான் இங்கு வந்ததற்கு முகாந்தரம் இல்லையா? உண்டு என்பதைப் புரிந்து கொண்டு தனக்கு தேவன் கொடுத்த காலத்தை மகிமைப் படுத்தினான். தேவ மக்களுக்கு சந்தோசத்தைக் கொடுத்தான். (1சாமு.17).

அன்பானவர்களே ! தேவப்பிள்ளைகளாயிருக்கும் நமக்கும் மற்றவர்களை சந்தோசப்படுத்தி தேவனை மகிமைப்படுத்தும் காலங்களை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். தாவீதைப் போல் இதை உணருகிறோமா ? உணர்ந்து செயல்பட்டுஅநேகரை பிசாசின் பிடியிலிருந்து விடுவித்து விடுதலையின் வாழ்க்கை வாழச்செய்வோம்.

தேவனுடைய படைப்பில் ஏனோக்கின் தந்தை யாரேத் 962 வருடங்களும், மகன் மெத்தூசலா 969 வருடங்களும் வாழ்ந்தார்கள். ஆனால் 365 வருடங்களே வாழ்ந்த ஏனோக் ஞானவானாய் காலத்தைப் பிரயோசனப்படுத்தி தேவனோடு வாழும் உன்னத வாழ்க்கையைப் பெற்றுக் கொண்டான். தன்னோடு 300 ஆண்டுகாலம் வாழ்ந்த ஏனோக்கை, தேவனே எடுத்துக் கொண்டார். ஆம்,காலத்தைப் பிரயோசனப்படுத்தும் ஞானவான்கள் கனத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள் ஆம் ஏனோக் காலகாலமாய் தேவனோடு வாழும் பாக்யத்தைப்பெற்றான் அன்பானவர்களே! கிறிஸ்தவர்களாய் வாழும் காலத்தைப் பெற்ற நாம் **எனக்கோ தேவனை அண்டிகொண்டிருப்பதே நலம்** (சங்73:28) என்ற தீர்மானத்தோடு வாழ்வோம். காலகாலமாய் நித்தியத்திலும் தேவனோடு வாழ்வோம்.

(மாற்கு 6:33-43) - ல் புதிய ஏற்பாட்டில் (6:33-34) இயேசுவின் சரித்திரத்தோடு தன்னையும் இணைத்துக் கொண்ட ஒரு சிறுவனின் ஞானமான செயலை உற்று நோக்குவோம். அவன் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்கும்படி ஆயத்தமாய் கால்நடையாய் ஓடிவந்து கூட்டத்தார் மத்தியில் அமருகிறான். இயேசு போதிக்கிறார், சிறுவன் உற்று கவனிக்கிறான் . போதனை முடிந்ததும் இயேசு எல்லாருக்கும் உணவளிக்க விரும்பி உங்களிடத்தில் இருப்பதை கொண்டுவாருங்கள் என்கிறார். இச்சிறுவனின் உள்ளத்தில் இயேசுவின் போதனை கிரியை செய்ததால் அவனில் இருந்த **நான், எனக்கு என்ற சுயம் மறைந்து** நாம் நமக்கு என்ற மனிதநேயம் தோன்றியதால் தன்னிடத்தில் இருந்த 5 அப்பம் 2 மீன்களை முழுமையாய் இயேசு விடம் ஒப்புக்கொடுத்தான். அந்த அர்ப்பணிப்பு 5000 பேருக்கு மேலான மக்களை திருப்தி அடையச் செய்தது. அவனும் திருப்தி அடைந்தான். இதை வாசிக்கும் வாசகரே! நம் வாழ்க்கையில் உங்களிடத்தில் அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூரும் காலங்கள் கூட்டி கொடுக்கப்படட்டுள்ளது. அதற்கு வயது வரம்பில்லை. காலத்தை பிரயோசனப் படுத்திக் கொண்ட இச்சிறுவனின் செயல் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய பெயர்களும் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட நமக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு காலங்களையும் ஞானமாய் பயன்படுத்துவோம்.

தொற்காள் விதவைதான். நல்ல விசுவாசி. அங்கிககளை தயாரிக்கும் கைத்தொழில் செய்பவள். வியாதிப்பட்டு மரணம்

அடைந்தாள். ஆனால், அவளைச் சுற்றி நின்ற விசுவாசிகள் அவள் செய்த நற்கிரியைகளையும், தர்மங்களயும் நினத்துப் பார்த்து, பேதுருவை அழைப்பித்து மரித்த தொற்காள் தான் வாழும்படியாய் தானக்குக் கொடுக்கப்பட்ட காலத்தை பிரயோசனப்படுத்தி நற்கிரியை செய்து மரணத்தை வென்றாள் [அப் 9:36–42] இச்செயல் அநேகரை கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் மாற்றியது [9:42]. ஆம் இந்த உலகில் மற்றவர்களோடு வாழும் காலங்களை தேவன் கூட்டிக் கொடுத்திருக்கிறார். கிடைத்த இந்த காலங்களில் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு நம்மால் இயன்ற நன்மைகளைச் செய்வோம். விசுவாசிகளாய் மாற்றுவோம். நம் கிரியைகளுக்குத் தக்கபலன் இயேசு வரும் போது கூட வரும். அது நம்மை இயேசுவோடு கூட பரலோகத்தில் சேர்க்கும் [வெளி 22:12.]

நிறைவாக, தன் வாழ்க்கையை இழந்து கொண்டிருந்த காலத்திலும் ஒரு தேசத்திற்கே வாழ்க்கையை மீட்டுக்கொடுத்த 4 குஷ்டரோகிகளைக் கருத்தில் கொள்வோம். சமாரியாவை சீரிய ராஜா முற்றுகையிட்டதால் சமாரியாவில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் அன்றாடம் உணவுக்கே வழியில்லாமல் பயத்தாலும், வேதனையினாலும் சூழப்பட்டார்கள். விடுவிப்பார் இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் பாளையத்திற்கு வெளியே வாழ்ந்த 4 – குஷ்ட ரோகிகள் எதிரியின் முகாமுக்கு வந்தார்கள். தேவனால் எதிரிகள் துரத்தப்பட்டு ஒருவருமில்லாதிருந்த முகாமில் தேவையான எல்லாம் இருந்ததை 4 குஷ்டரோகிகளையும் கண்டு, தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் தேவனால் தங்களுக்குக் கொடுக்ககப்பட்ட வாழும் காலத்தை பிரயோசனப்படுத்த தீர்மானித்தார்கள். இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள் என்பதை உணர்ந்தார்கள். அந்த உணர்வு அவர்களைத் தூண்டியதால். இந்த நல்ல செய்தியை தேசத்திற்கு அறிவித்தார்கள். வாழ்வின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருந்த 4 குஷ்டரோகிகளால் சரியான காலத்தில் அறிவிக்கப்பட்ட அந்த நற்செய்தி அத்தேசத்து மக்கள் அனைவரையும் பிழைப்பூட்டியது. கொடிய பஞ்சத்தில் அகப்பட்டிருந்த அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். அன்பான தேவ மக்களே, சாத்தானால் முற்றுகையிடப்பட்டு கொடிய பாவத்தால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் தேவன் கொடுத்த சமாதானத்தை, சந்தேஷத்தை இழந்து தவிக்கும் அநேக மக்கள் நம் முன் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் இப்படி வாழ்ந்த நம்மை தேவனின் சுவிசேஷம்

சந்தித்தால் நாம் சந்தோஷமான சமாதானமான நித்தியத்தைக் குறித்த நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த சுவிசேஷ நற்செய்தியை நாம் மற்றவர்களுக்கு அறிவிக்கும்படி காலத்தை கூட்டிக் கொடுத்திருக்கிறாரே நாம் மௌனமாக இருக்கலாமா? இது நியாயமல்ல. இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள். மற்றவர்களிடத்தில் இரட்சிப்பின் வாழ்க்கையை உருவாக்கும் காலம், தேவனுக்காக சேவை செய்யும் காலம். ஆகையால் காலத்தை ஆதாயப்படுத்துவோம். 2020 ஆம் ஆண்டின் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் **தேவன் நீடித்து கொடுத்திருக்கும் இக்காலங்களில்** ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி ஞானவான்களாய் திகழ (நீதி 11:30) தீர்மானிப்போம். நம்முடைய கணக்கில் பரலோகில் பொக்கிஷத்தை சேர்ப்போம். ✝

**தேவன் எப்படி நம்மைத் தேற்றுகிறார் ?**

**தேவன் தம்முடைய பிரசன்னத்தினாலே நம்மைத் தேற்றுகிறார்**

**பிதா (சங். 139:5 )**
**குமாரன் (மத். 28 :18-20)**
**பரிசுத்த ஆவியானவர் ( II கொரி. 13:14)**

**தேவன் தம்முடைய வார்த்தையினாலே நம்மைத் தேற்றுகிறார்**

**( I தெச. 4:18; I சங்கீதம் 119:49,50)**

**தேவன் தம்முடைய பரிசுத்தவான்கள் மூலமாக தோற்றுகிறார்**

**( II கொரி. 7:6; I தெச. 5:14)**

## ஆட்டுக்குட்டியானவர்

1. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் - வெளி 5:12
2. ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனத்தின்மேல் - வெளி 5:7
3. முத்திரையை உடைக்கும் ஆட்டுக்குட்டியானவர் - வெளி: 6:1
4. ஆட்டுக்குட்டியானவரை பின்செல்லும் கறைபடாதவர்கள் - வெளி :14:4
5. ஆட்டுகுட்டியானவருக்காக மீட்கப்பட்ட முதற்பலன்கள் வெளி :14:4
6. யுத்தம் பண்ணும் ஆட்டுக்குட்டியானவர் - வெளி 17:14
7. கர்த்தாதிகர்த்தரும் இராஜாதி இராஜாவுமான ஆட்டுக்குட்டியானவர் - வெளி 17:14

# உபதேசங்கள் தேவனுடையது

Bro. **ஆசீர்வாதம்**

உபதேசங்கள் தேவனிடத்திலிருந்து புறப்பட்டது

உபதேசங்கள் கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கப்பட்டது

உபதேசங்கள் அப்போஸ்தலருக்கு ஒப்புவிக்கப்பட்டது

உபதேசங்கள் சபைகளுக்கும் உண்மையுள்ள மனுஷருக்கும் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன

(**வேதம் என்னிலிருந்து வெளிப்படும் என்று தேவன் சொல்லுகிறார்** (ஏசா 51 :4) தேவனுடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன் (யோவான் 12 : 50) என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்வதினால் மனுஷனுக்கு நித்திய ஜீவன் உண்டாகும் என்பதை இயேசு அறிந்து, தாம் கண்டதையும், கேட்டதையும் குறித்து சாட்சிக் கொடுக்கிறார். **இயேசுவானவர் கண்டவைகளும் கேட்டவைகளுமாகிய நாம் கைக்கொள்ள வேண்டிய அவருடைய சாட்சிகளே உபதேசங்களாகும்.** உபதேசங்கள் தேவனுடைய கட்டளைகள் என்பதையும் அது எவ்விதமாய் உலகத்தை வந்தடைகிறது என்பதையும் விளங்கச் செய்வதே இந்தப் பாடத்தின் நோக்கமாகும். தேவனுடைய இருதயத்திலிருந்து உண்டாகும் அவருடைய தீர்மானம், உபதேசங்களாக, சட்டங்களாக மனுஷருடைய வாழ்க்கையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. பாவத்தினால் ஆத்துமாவில் மரணத்தைச் சுமந்து, தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருக்கிற ஒவ்வொரு மனுஷ ஆத்துமாவும் அப்படியே அழிந்து போகாமல் இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்படையவும் நித்திய ஜீவனாகிய கிருபையைப் பெற்றுக்கொள்ளவும், தேவன் சித்தங் கொண்டு, தம்முடைய தயவுள்ள சித்தத்தை நமக்குள் நிறைவேற்றும்படி அவைகளை நமக்கு சட்டங்களாகவும், உபதேசங்களாகவும் கொடுத்திருக்கிறார். நாம் அவைகளில் நடக்கும்படி அவர் முன்னதாக எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணியிருக்கிறார் (எபேசி 2 : 10). மேலும், ஜீவனுக்கும், தேவபத்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்கு தந்தருளியிருக்கிறது. (II பேதுரு 1 : 3). எனவே, தேவனுடைய கட்டளைகளை அதாவது நமக்கு நித்திய ஜீவனை கொடுக்கக்கூடிய சட்டதிட்டங்களை நாம் சரியாக அடையாளங்கண்டு, அவைகளை கலப்பில்லாமல் பின்பற்ற வேண்டியது மிகவும்

அவசியமாயிருக்கிறது. மற்றபடி நம்முடைய விசுவாசம், நம்முடைய பிரயாசங்களும் வீணாய்ப் போய்விடும். இம்மைக்காக மாத்திரம் (இந்த உலக வாழ்க்கைக்காக மட்டும்) நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்ஏதால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (1 கொரி 15 : 19)

## A. உபதேசங்கள் தேவனிடத்திலிருந்து புறப்பட்டது

ஒருவன், மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான் (2 தீமோ 2 : 5) எந்த ஒரு போட்டியிலும் சட்டத்தின்படி செயல்படவிட்டால் பரிசுப் பொருளைப் பெறமுடியாது. பரிசுபொருள் வைக்கப்பட்டிருந்தால் அதைப் பெறுவதற்குரிய சட்டதிட்டங்கள் இருக்கும். சாதாரணமாக இந்த உலகப் போட்டிகளுக்கு எத்தனையோ சட்ட திட்டங்கள் கட்டுப்பாடுகள் இருக்கும் போது, பரலோகத்தில் சுதந்தரமான குடியிருப்பு (பிலிப் 3 : 20) ஆவிக்குரிய சரீரம் (1 கொரி 15 : 46) நித்திய வாழ்வு (1 யோவா 2 : 25) ஆகிய பரிசுப் பொருள்களை நமக்கு வைத்த தேவன், அவைகளைப் பெறுவதற்குரிய சட்டதிட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் குறித்து ஒன்றும் சொல்லாதிருப்பாரா? நிச்சயம் சொல்லியிருப்பார். அப்படி தேவனால் கட்டளையிடப்பட்ட சட்டதிட்டங்கள்தான் மனுஷனுக்கு உபதேசங்களாகப் போதிக்கப்படுகிறது. மேலும் நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்கு கட்டளையிட்டார்.(யோவா 12 : 49) என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். இதன் மூலம் உபதேசங்கள் தேவனுடையது என்பது வெளியரங்கமாய் இருக்கிறது. அந்த உபதேச சட்ட திட்டங்கள் கொடுக்கப்பட்டும் இருக்கிறது.

ஜீவனுள்ள தேவனை வணங்குகிறவர்களுக்கும் மற்ற தெய்வங்களை வணங்குகிறவர்களுக்கும் வித்தயாசமுண்டு. மற்றத் தெய்வ வழிபாடுகளை உடையவர்கள் தங்கள் விருப்பப்படி தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு தங்கள் விருப்பப்படி தாங்கள் விரும்புகிற தெய்வங்களை வணங்கி, பல்வேறு சடங்கு களை நிறைவேற்றுகிறார்கள். உண்மையில் இந்தச் சடங்காச் சாரங்களெல்லாம் அந்த தெய்வங்களால் கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் அல்ல. மற்றவர்களைப் பார்த்து ஒரு பாரம்பரியத்தைப் போல செயல்படுகிறார்கள். இந்த உலக வாழ்க்கையில் தாங்கள் நல்லபடியாக இருக்கவேண்டும் என்கிற ஒரே நோக்கத்திற்காகவே மனிதர்கள் இப்படிப்பட்ட தெய்வ வழிபாடுகளை உடையவர்களாய் இருக்கிறார்கள்.

ஆனால் ஜீவனுள்ள தேவனை சேவிக்கிறவர்கள் அப்படியல்ல. இதற்குப் பின்வருகிற பரலோக வாழ்வுக்காக தேவனால் கட்டளையிடப்பட்ட அவருடைய சட்டதிட்டங்களை இவ்வுலக வாழ்க்கையில் நிறைவேற்றுகிற பரிசுத்த ஆசாரிய கூட்டமாயிருக்கிறார்கள். தேவனிடத்தில் மனந்திரும்புகிறவன் அவருடைய சட்டத்தின்படி அவரோடு ஒப்புரவாக்கப்பட வேண்டும். அவரை ஆராதிக்கிறவன் அவருடைய சட்டதிட்டங்களின்படி அவருக்கு ஆராதனைச் செய்யவேண்டும். இவ்வுலகத்திலும் தேவனுடைய கட்டளைகளை தங்கள் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டும். இங்கு சகலம் தேவன் தான் திட்டம் பண்ணுகிறார். தேவனுடைய காரியங்களில் மனுஷனுடைய ஆலோசனையை தேவன் எதிர்பார்ப்பதில்லை, மாறாக, தேவன் மனுஷனிடத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். ஆகையால், தேவன் எவைகளை கட்டளையிட்டிருக்கிறாரோ அவைகளை கைக்கொண்டு தேவனுக்கு கீழ்ப்படிந்திருப்பதே மனுஷனுடைய கடமையாயிருக்கிறது. தேவனுடைய காரியங்களில் சுயவிருப்பத்தின்படி செயல்பட ஒரு மனிதனுக்கும் அதிகாரமில்லை. இப்படி செயல்படுகிறவர்களும் அப்படி செயல்பட போதிக்கிறவர்களும் தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராய் இருப்பார்கள். இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும் மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது. [கொலோ 2 : 23] ✝

## நாளும் நடப்பும்

- பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கு கணிசமான அளவில் பாடம் குறைப்பு - தமிழக அரசு
- இந்தியாவில் கொரோனா நோயின் தாக்கம் குறைந்துவிட்டது, தடுப்பு ஊசி கண்டுபிடிப்பில் மருந்து நிறுவனங்கள் மும்முரம்.
- தமிழகத்தில் வடகிழக்கு மழை தீவிரமடைந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி
- டெல்லி எல்லையில் விவசாயிகள் மத்திய அரசை கண்டித்து தொடர் போராட்டம்.
- இந்தியா ஆஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் போட்டி விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.